
# ஆத்ம ஜோதி



ஸ்ரீ சட்டம்பி சுவாமிகள்



# ஆத்ம ஜோதி

(ஓர் ஆத்மீக மாத வெளியீடு)

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.—சுத்தானந்தர்,


| சோதி 12 | விகாரிஹு பங்குனிமீ 1-ந்உ (13-3-60) | சுடர் 5 |
| --- | --- | --- |


## பொருளடக்கம்.


| | | |
| --- | --- | --- |
| 1, | பேரின்பத் தெள்ளமுது | 129 |
| 2. | ஸ்ரீ சட்டம்பி சுவாமிகள் துதி | 130 |
| 3. | துன்பம் | 131 |
| 4. | திருமுறைக் காட்சி (30) | 134 |
| 5, | விவேகானந்தர் | — |
| 6. | அவரே மகாத்மா | — |
| 7. | கோரளத்தில் உதித்த ஜோதி | — |
| 8. | அடிமைதனை ஏற்றுக்கொள் | 145 |
| 9. | பிறவிக்கடலைத் தாண்ட......... | 152 |
| 10. | அடியவர் மகிமையும் நம் கடமையும் | 154 |
| 11. | விஷ்ணு தீபம் | 157 |
| 12. | சுவாமி அபேதானந்தா................... | 160 |
| 13. | திவ்வியஜீவனசங்க வெள்ளி விழா | — |


## ஆத்ம ஜோதி சந்தா விபரம்.


ஆயுள் சந்தா ரூ. 75-00, வருடச் சந்தா ரூ. 3-00
தனிப்பிரதி சதம் 30.

கௌரவ ஆசிரியர் : க. இராமச்சந்திரன்

பதிப்பாசிரியர் ; நா. முத்தையா,

"ஆத்ம ஜோதி நிலையம்" நாவலப்பிட்டி. (சிலோன்.)

# பேரின்பத் தெள்ளமுது

(மகரிஷி சுத்தானந்தர்)

அரைநொடி யிதற்கிட மளித்திடிற் போச்சுதென்
ஆவியை யலைக்கு தந்தோ!
ஆகாத பேயலைகளை ஆயிரம் எழுப்பியென்
அமைதியிற் புயல் வீசுதே
உரிமையினை உரிமைகொண் டெணவாட்டி யுலகெ
ஒட்டிக் குதித் தாடுமே! [லாம்
உதவாத கனவிலும் ஊர்வம்பு தன்னிலும்
உலகா யதச் சேற்றிலும்
கரையற்ற கருமபத் தங்களிலு மாசையாங்
கானல்வெஞ் சுரம தனிலும்
காமாந்த காரமாங் காட்டினிலு மென்றனைக்
கண்கட்டி விளையா டுதையே
துறுதுறுக்குந்துட்ட மனதினை யடக்கவொரு
சூட்சுமஞ் சொல்லையனே
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சுடர் பரவு சோதி மலையே! (29)

இனிமே லிதற்கிட மொருகாலு மீந்திடேன்
இஃதுறுதி யுறுதி சொன்னேன்
எத்தனை முறை சபத மிட்டுரைத்தேன் முடிவில்
இமையாது பார்த்து நின்றேன்
தனிமையிற் கட்டிச் சதாமோன மென்னுந்
தடித்த வாய்ப்பூட்டு மிட்டேன்
தானறு சமாதியிற் சலனமற்று நிற்கவொரு
சகச பீடமுமமைத்தேன்
கனவு வளர் முன்னிலைச் சுட்டறக் காண்பதே
கவலையறு காட்சி யென்றேன்
கலங்காம லினியிது கதிக்கரன முக்திபெறக்
காப்பு நீ கருணை வள்ளால்!
துனிவற்ற கடலுநீ, கலமுநீ, கரையுநீ
துணைவநீ, துரிய குருவே! (30)
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சுடர் பரவு சோதி மலையே

# ஸ்ரீ சட்டம்பி சுவாமிகள் துதி

வெண்டுகி லுடுத்த துறவி
மனையிடை வாழ்ந்த தியாகி
பண்டிதத் திறமை காட்டான்
பாமர மொழியிற் பேசி
அண்டின பேரைத திகைக்க
வைத்திடும் அறிவின் ஆழி
தண்டிரைச் சேரர் செம்மல்
சட்டம்பிச் சாமி வாழ்க

ஆரியம் தண்டமிழ் ஆங்கிலம்
ஆதிய மொழியிற் புலமை
சீரிய பல்கலைத் தேர்ச்சி
சங்கீத யோக ஞானம்
கூரிய மதிநற் றுணையுங்
கொண்டு வித்யாதி ராஜன்
பேரினுக் குரிமை யானேன்
பரம பட்டாரன் வாழ்க!

ஈழவர் குலத்து முனிவன்
ஈடிலா நாராயணநாம்
எழிசை முழக்கஞ் செய்து
இறைநாமம் பரப்புகின்ற
ஆழியின் அன்பு வள்ளல்
அபேதா னந்தர் சரமும்
வாழியென் றேத்துங் குருவாம்
வித்தியாதி ராஜன் வாழ்க!

சுவாமி மதுரானந்தர்

# துன்பம்.

(ஆசிரியர்)

உலகிலுள்ள ஜீவகோடிகள் எல்லாம் இன்பத்தையே விரும்புவன. துன்பத்தை விரும்புவன இல்லையென்றே கூறலாம். இதற்கு மாறாக குந்திதேவியார் கண்ணபிரானிடம் துன்பமே வேண்டுமென்று விரும்பி வரம் பெற்றுக்கொண்டார். காரணம் கேட்டதற்கு துன்பம் வரும்போதுதான் உன்னை நினைக்கின்றேன். ஆகலால் துன்பத்தையே இடைவிடாது கொடுத்துக்கொண்டிரு என்றாராம்.

துன்பம் என்பதொன்றிருப்பதால்தான் மனிதர் இன்பத்தை விரும்புகின்றனர்; அநுபவிக்கின்றனர். வறுமையும் இடையூறும், பலவகைக் கவலையும், துன்பமுமே மனிதன் வாழ்க்கையில் காண்பவை. இவற்றின் பலனை மனிதன் ஆராயத் தவறிவிடுகின்றான். ஆகலால்தான் துன்பத்தைக்கண்டு மனிதர் ஓட்டெடுக்கின்றனர். துன்பம் என்பது ஆண்டவனின் வரப்பிரசாதமே என மகான்கள் தமது அனுபவத்தில் கண்டு கூறியுள்ளனர். துன்பத்தின் படிகளே இன்பத்திற்கு ஏணியாகும்.

மனித வாழ்வின் முக்கிய நோக்கம் நித்தியப் பொருளை அடைதலே. அதுவே பேரின்பமாகும். துன்பம் இல்லாது போனால் மனிதன் நித்தியப் பொருளை அடைய முயற்சிக்கப் போவதில்லை. ஐம்புல இன்பமே மேலான இன்பமென மக்களிற் பெரும் பகுதியினர் கருதுகின்றனர். அதற்காக உடலிலுள்ள சக்தியை விரயம் செய்கின்றனர். சக்தி வீணாகவே உடலில் ஒளிந்திருந்த பிணிகள் தோன்றுகின்றன. வாழ்நாள் முழுவதும் பிணியோடு போராடுகின்றான். அத்துடன் முதுமையும் வருகின்றது. பிணியும் மூப்பும் துன்புறுத்துகின்றன. நல்லவற்றைச் சிந்திக்கப் பெலமில்லை. மூப்புக்கும் பிணிக்கும் அடிமையாகி வந்த காரியம் நிறைவேறாது மரணத்திற்கு ஆளாகின்றான். அப்போது சில பாடங்களைக் கற்றுக்கொள்ளுகின்றான். கற்றும் என்? மறுபடியும் மறுபடியும் அதேமாதிரிதான். எத்தனையோ பிறவிகளில் அடைந்த துன்பத்தின் பல

னுக பிறவித்தளையினின்று விடுபட வேண்டும் என எண்ணம் எழுகின்றது. அதுவே பேரின்பத்திற்குரிய மார்க்கத்தில் செல்லத்தூண்டுகின்றது.

துன்பத்தினாலேதான் ஆன்மா வாழ்வின் நோக்கத்தையும் ஆதாரத்தையும் அறிகிறது. கவலையும் துன்பமும் மனிதன் வாழ்வின் வாயிலைத்திறந்து வாழ்க்கையின் பெருமதிப்பையும் சக்தியையும் கிரகிக்கச் செய்கிறது. துன்ப வழியில் சென்றால்தான் நுண்ணிய ஆத்ம மண்டலங்களுக்கு முன்னேறிச் செல்ல முடியும். இடுக்கண், கவலை என்னும் நெருப்புக்கூடாகச் சென்றால்தான் வாழ்வின் பூரண மகிமையும் எழிலும் வெளிப்படும்.

அழகிய ஆண்குழந்தை பிறக்கிறது. பெற்றவள் பெரிதும் மகிழ்கிறாள். எவ்வளவோ வேதனையின் பின் இச்சிறிய இன்பம் பிறக்கிறது. பேரின்பம் கிடைப்பதாயின் எத்தகைய பெரிய துன்பத்தைத் தாண்டவேண்டும், நன்றாகக் காய்ச்சிய பால்தான் ருசியைப்பெறுகின்றது. நன்றாக அரைக்கப்பெற்ற சந்தனம்தான் மணங்கமழுகின்றது. நெருப்புச் சட்டியிலிட்டு நன்கு உருக்கிய பொன்தான் ஒளி பெறுகின்றது. நன்கு உருக்கிய இரும்புதான் உருக்கு ஆகின்றது. தாங்கமுடியாத வேதனை பெற்றெடுத்த குழந்தைதான் இன்பம் என்பது.

தேவருடைய வாழ்வு இன்பமானது. ஆனால் அது சுவையற்ற வாழ்வு. எல்லாப்பண்டமும் இனிப்புடையதாய் அமைந்துவிட்டால் எப்படி இருக்குமோ? அதுபோன்றது. துன்பமும் வருத்தமும் இல்லாத வாழ்வு நிச்சயமாகச் சுவையற்றதாகவும் சலிப்புத்தருவதாகவும் இருக்கும். ஏனெனில் உண்மையாழகும், பயமும், சாந்தியும், இன்பமும், துன்பக் கருப்பையிலே தோன்றுகின்றன. அங்கேயே பேணப்படுகின்றன. கைப்பைச் சுவைத்தபின் இனிமையைச சுவைத்தால் அதனை நன்கு அநுபவிக்கலாம். வெயில் இருந்தால் தானே நிழலின் அருமை தெரியும்.

எனவே துன்பத்தை வாழ்த்துவாயாக! துன்பத்தின் உபயோகத்தைச் சிந்தி. வாழ்வில் அதனைச் செவ்வையாகப்பாவி. துன்பம் அடிக்கடி வந்து பேரின்பத்தை நினைவூட்டுகின்றது நீ அதனை அடிக்கடி மறந்து போகின்றாய். நீ நல்லது செய்ய

அதனைப் பொல்லாதது எனப் பலர் கோள்சொல்லித் தூற்றுவர். அதைக்கண்டு அஞ்சாதே. மேலும் மேலும் நல்லதைச் செய்யவே முயற்சி செய்.

துன்புறுவதன் மதிப்பைக்குறைக்கவேண்டாம். உயர்ந்த வாழ்வுக்கு இது மிக மிக அவசியமானது. உனது களங்கமற்ற அன்புக்கு மாசு கற்பிக்கப்படலாம். அதற்காக அன்பு செய்வதை விடாதே. உனது அன்பு எங்கு ஏற்றுக்கொள்ளப்படவில்லையோ அங்கு அன்பு செலுத்துதலே இன்பமானது. துன்புறுவதற்கு அஞ்சாதே. அதிலிருந்து விலகி ஓடவும் முயலாதே. இடையூறுகளையும் தொந்தரவுகளையும் எதிர்கொண்டழைப்பதனால் உனது மனோசக்தியைப் பெருக்கு. அழியா நிலையின் சாந்தியும் இன்பமும் அடைந்தபின் ஆன்மாவுக்குத் துன்பம் என்பதே கிடையாது. பெருந்தணலை ஈர விறகு என்ன செய்ய முடியும். ஈர விறகும் பெருந்தணலாக மாறிவிடுகின்றதல்லவா? உண்மைப்பொருளை அறியும் வரை துன்பம் துன்பமாகவே தோன்றலாம். உண்மைப்பொருளை அறிந்துவிட்டால் துன்பம் என்பதே இல்லை. இன்பம் ஒன்றே எஞ்சி நிற்பது. மரணத்தை எப்போதும் நினைப்பவன் ஒவ்வொரு நாளும் சாவதில்லை. கவலையற்று அமைதியுடன் இருக்கிறான். மரண நினைவால் நல்லதையே செய்கிறான். அது மனச்சாந்தியைக் கொடுக்கிறது. அதுவே வாழ்வின் இரகசியமாகும்.

துன்பம் வாழ்வின் முடிவிலா உவகைப் பெருக்காக மாறுகின்றது. இங்கு வருத்தமும் துன்பமும் தங்கள் உன்னத வெற்றியை அடைகின்றன. இத்தகைய வெற்றியை அடைந்தவர்களே நீடித்துத் துன்பம் அனுபவிப்பதன் இனிய பலனை அறிவார்கள். இவர்களே இறைவன் நல்லவன், கருணையுடையவன் எனச் சொல்லுவர். வாழ்க்கையின் இருள் மிகுந்த துன்ப நேரங்களே என்றும் நிலைத்து நிற்கும். சாந்தியும் மகிழ்ச்சியும் நிறைந்த பேரொளி உதயத்தை அழைக்கிறதென்பதை அறிவதால், அவர்கள் உலகில் காணப்படும் நிலைமைகளில் குற்றம் காண்பதில்லை. ஆகவே துன்புறுபவர்களே பாக்கியசாலிகள்!

# திருமுறைக் காட்சி (30)

(முத்து)

## உய்யக்கொள்ளும் காண்மினே.

மகான்கள் மக்களை மாக்களாக விடாது மக்களாக வாழச் செய்வதற்குப் பலவித உபதேசங்களைப் புரிந்துள்ளார்கள் ஒரே உபதேசத்தையே இருவர் இருவிதமாகக் கூறலாம். உபதேசம் ஒன்றுதான், சொல்லும் வகையில்தான் வித்தியாசம் ஆனால் அதில் ஒருவர் சொல்வதைச் சிலர் மெச்சுகிறார்கள் வேறு சிலர் மற்றவர் சொல்லுவதை மெச்சுகிறார்கள். ஒருவருக்கு ஒருவர் சொல்லும் வகையில் ஈடுபாடு உண்டாகிறது மற்றவருக்கு இன்னொருவர் சொல்லும் வகையில் ஈடுபாடு உண்டாகிறது.

உபதேசம் புரிபவர் தாமே பலவித குற்றங்களைச் செய்தவராகவும் அதை மன்னித்து ஆட்கொள்ள வேண்டும் என்றும் கேட்பது ஒருவகை. உலகத்திலுள்ள அத்தனை பாவங்களுக்கும் ஆளாகியிருக்கும் எனக்கும் உனது பாதத்தை நாடும் பாக்கியம் கிடைக்குமோ என்று ஏங்குவது இன்னோர் வகை. இத்தனை பாவங்களும் உன்னை மறந்து செய்த என்னைக் கருணையினால் ஆட்கொண்டாயே என்று கூறுவது பிறிதோர் வகை.

இத்தகைய உபதேசங்களை தம்முடைய மனத்தை விளித்துச் சொல்வது ஒருவகை. ஆண்டவனையே விளித்துச் சொல்வது இன்னோர் வகை. மக்களை விளித்துச்சொல்வது பிறிதோர் வகை. எவ்வகையில் உபதேசம் புரிந்தாலும் ஒவ்வொருவரும் அது தம்மை நோக்கியே சொல்லப்பட்டதாக உணர வேண்டும். மகான்களுடைய உபதேசத்தில் உள்ள ஒரு சிறப்பு என்னவென்றால் அவருடைய உபதேசத்தைப் படிக்கும் ஒவ்வொருவனும் தம்மை நோக்கியே அவ்வுபதேசம் கூறப்பட்டதாகக் கொள்ளும் வகையில் அமைந்திருப்பதுதான் நாவுக்கரசுப் பெருமான் பல இடங்களில் மக்களை அழைத்து முன்னிலைப்படுத்தி உபதேசங்கள் புரிகின்றார்.

மக்களில் நால் வகையினரைக் காணலாம். ஆசையில் அழுந்திக்கிடப்பவர்கள்; ஆசையின் துன்ப நிலையை அநுபவத்தில் உணர்ந்து ஆசையை விட முயல்பவர்கள்;

ஆசையை விட்டுக் கொண்டிருப்பவர்கள், ஆசையை முற்றாக விட்டவர்கள். ஆசையை முற்றாக விட்டவர்களுக்கு உபதேசமே தேவையில்லை. என்றாலும் மகான்களுடைய உபதேசங்கள், பெற்றோலில் நெருப்புத்தானாகவே சென்று பற்றுவதுபோல அவர்களை தாமே ஈர்த்து ஈர்த்து என்புருக்கித் தம் வசமாக்கி விடுகின்றன. ஆசையை விட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு மண்ணெயில் விளக்கு ஏற்றுவதை உவமையாகக் கூறலாம். நெருப்புத்தானாகத் தேடி சென்று பற்றினால்தான் அது பற்றும். நெருப்பைத் தேடி அது செல்வதில்லை. அனுபவத்தில் உணர்ந்து ஆசையைவிட முயல்பவர்களுக்கு தேங்காய் எண்ணெயில் விளக்கு ஏற்றுவதை உவமையாகக் கூறலாம். தேங்காய் நெய்த்திரியைக் கசக்கி பற்றவைத்தால்தான் பற்றும். இல்லையேல் எண்ணெய் வற்றும் வரை சூடேற்ற வேண்டும் ஆசையிலே அழுந்திக் கிடப்பவர்களுக்கு விளக்கெண்ணெயில் (ஆமணக்கெண்ணெ) திரி பற்றவைப்பதை உவமையாகக் கூறலாம். விளக்கெண்ணெ பற்றவைக்கும் நெருப்பையே சுடர்விழுந்து அவித்துவிடும். முயற்சி வீணாவதே தவிர காரிய சித்தியில்லை. அதே போன்று ஆசையில் ஆழ்ந்து கிடப்பவர்களிடையிலும் உபதேசம் பலிதமாவதில்லை. அவர்களுக்கு உபதேசம் செய்தால் முயற்சி வீணாவதோடு மனக் கஷ்டத்தையும் பெறவேண்டியுள்ளது. நாவுக்கரசு பெருமான் ஆசையில் அழுந்திக்கிடப்பவர்களை நீக்கி மற்றைய மூவகையினரையும் விளிக்கின்றார்.

மயல்தீர் மனிதர்காள்!

என்பது அப்பருடைய வாக்கு. ஆசைகளை விட்ட மனிதர்களே என்பது பொருள். ஆசையை விட்டவர்கள் தான் ஆத்மிக சிந்தனை செய்வார்கள் அத்துடன் ஆத்மிக விஷயங்களில் சிரத்தையும் ஏற்படும். அப்படிப்பட்ட மனிதர்களைப் பார்த்து வந்துகேண்மின் என்கிறார். சிரத்தையோடு வந்து கேளுங்கள் என்பது பொருள். ஆசை உள்ளவன் சிரத்தை எடுப்பதுமில்லை. எடுத்தாலும் பயன் தருவதில்லை இவ்வளவு பீடிகையெல்லாம் போட்டு எதைவந்து கேளுங்கள் என அழைக்கின்றார்?

வெந்த நீற்றன் விசயமங் கைப்பிரான்
சிந்தை யால்நினை வார்களைச் சிக்கெனப்
பந்து வாக்கி உயக்கொளுங் காண்மினே.

திருவிசயமங்கைப் பெருமான் நெருப்பிலே வெந்த தூயதான திருநீற்றை அணிந்தவன். அக்கினி சாணத்திலுள்ள மலத்தன்.

மையை நீக்கிப் பரிசுத்தம் செய்வது போல இறைவனும் எமது மலத்தை நீக்கிப் பரிசுத்தனுக்குவான். விபூதியின் வெண்மை ஆனந்தத்திற்கு அடையாளம், உலகநிலையாமைக்கும் அடையாளம். ஆசையை எரித்தவர் ஆனந்தம் பெறுவர், மலத்தினின்று விடுபட்டவர் மானடி சேர்வர். விபூதியை யார் பூசுகிறார்களோ அவர்கள் பரிசுத்தம் அடைகின்றனர். உண்மைப் பொருளை உணருகின்றனர். தம்மைப் பார்ப்போருக்குச் சில நினைவை உண்டாக்குகின்றனர். இறைவன் எல்லாங் கடந்தவனாயிற்றே! அவனும் விபூதி தரிக்க வேண்டுமா? அவனுக்கு எதுவுமே தேவையில்லை. அவன் குறைவிலா நிறைவு. வாள் வித்தை பயிற்றும் ஆசிரியர் வாளைப் பிடித்து யுத்தம் செய்கிறார். பழகுகிறாரா? இல்லை பழக்குகிறார் மருந்து குடியாத குழந்தையைப் பார்த்து இதோ நான் குடிக்கிறேன் என்று பாசாங்கு செய்கிறாள் தாய். குழந்தையும் உடனே வாங்கிக் குடித்து விடுகின்றது. இறைவன் புகழைப் பாடும்போதெல்லாம் அவன் வெண்ணீற்றின் ஞாபகம் வருகிறதல்லவா? ஆகவே எமக்கும் வெண்ணீறு அணியத் தோன்றுகிறது. இவற்றையெல்லாம் அடக்கி.

வெண்ணீற்றின் விசயமங் கைப்பிரான் என்றார் அப்பரடிகள். இத்தகைய எம்பிரானை பக்தியோடு நினைத்தால் அவர்களை இறைவன் தனது பந்து வாக்கிக்கொள்கின்றானும். ஆனால் ஆயிரத்தில் ஒருவர்தான் நெகிழ்ந்து நினைக்கின்றார்கள். அங்ஙனம் நெகிழ்ச்சி ஏற்படும் போதுதான் அன்பு நிறைகின்றது. தம் உள்ளத்தை அன்பினால் நிறப்பிக்கொள்பவர்கள் யாவரோ அவர்கள்தான் பக்திமான்களாகின்றார்கள். அவர்களைத் தனது பந்து வாக்கிக்கொள்வதில் ஆண்டவனுக்குத் தனி ஒரு இன்பம். பக்தனைத் தனது பந்து என்று சொல்லிக்கொள்வதில் பெருமை அடைகின்றான். இத்தகைய பக்தர்களை இறைவனே வலிந்து வந்து ஆட்கொள்ளுகின்றான் என்பது அப்பருடைய சொந்த அனுபவம். இப்பா பாடலை முழுவதும் படித்து அனுபவத்தை ரசியுங்கள்.

வந்து கேண்மின் மயல்தீர் மனிதர்கள்
வெந்த நீற்றன் விசயமங் கைப்பிரான்
சிந்தை யால்நினை வார்களைச் சிக்கெனப்
பந்து வாக்கி உயக்கொளுங் காண்மினே.

பொருள்: ஆசைகளை விட்ட மனிதர்களே, சிரத்தையோடு வந்து நான் கூறுவதைக் கேளுங்கள் நெருப்பிலே வெந்து தூயதான திருநீற்றை அணிந்தவனாகிய திருவிசய மங்கைப் பெருமான், மனத்தால் பக்தியோடு தன்னை நினைப்பவர்களை உடனே உறுதியாகத் தன்னுடைய உறவினராக்கி அவர்கள் உய்வடையும் வண்ணம் ஆட்கொண்டருளுவான். இதை நீங்கள் அநுபவத்திலே காணுங்கள்.

# விவேகானந்த நாதம்



[மூலம் கலைச் செல்வி]

அமெரிக்கா ஒரு நூதன சக்தி இயைந்த நாடு. கொலம்பஸ் முதல்முதல் அமெரிக்காவை அடைந்தபோது, கற்கால வாழ்வு வாழ்ந்த அமெரிக்க சுதேசிகள் திடீரென இரும்புக்கால நாகரிக மக்களாக மாறினர் சுவாமி விவேகானந்தர் அமெரிக்க நகரமாகிய சிக்காகோவில் எழுப்பிய இந்து மதநாத வெள்ளத்திலே மூழ்கிய அமெரிக்கர் இன்று உலகத்திற்கே சமயதத்வம் போதிப்பதில் இந்து மதத்தினரையும் மிஞ்சிவிட்டனர். இந்து மதம் அங்கே புயல் வேகத்தில் மறுமலர்ச்சியடைகிறது. விவேகானந்த அடிகள் வித்திட்ட இந்துமதம் ரொக்கி மலைத் தொடரையுத்தாண்டி க்லிவோணியாவில் வேரூன்றிப் பாரிய விருட்சமாக வளர்கிறது. இதோ இவர் தாம் இந்து மத கலாச்சாரம், பண்பாடு இவற்றில் ஊறித்திளைத்த சுப்பிரமணியம் என்ற இந்து நாமத்துடன் கிருஷ்ணாச்சிரமம் (Krishna Chappel) என்னும் பெரியதோர் ஆச்சிரமத்தின் ஸ்தாபகராகவும் குருவாகவும் விளங்கினர் இவரது வரலாறே தனித்துவம் வாய்ந்ததும் ஆர்வம் நிறைந்ததும் ஆகும்.

"ஹான்சன்" என்பது இவரது இயற்பெயர், ஒருகாலம் உலகப்பிரசித்தி பெற்ற நாட்டியக்காரர். ஹோலிவுட்டில் நாட்டிய நிர்வாகியாகக் கடமை புரிந்த பொழுதிலும் மாமிச உணவோ மதுவர்க்கமோ அறியாத தூய்மையினர். பிரமச்சாரிய வாழ்க்கையினர் விவேக

(தொடர் 144 பக்கம் பார்க்கவும்)

ஓம்

# அவரே மகாத்மா

நாதக் கனிகள் பலதருவேன்:
ஞானக் குயிலே! ஞாலமெலாம்,
ஓதற் கரிய மாட்சிமிகு
உண்மை மகாத்மா யார்? புகலாய்! 1

ஏழை, எளியார் துயர்கண்டு
இதயம் இரத்தப் புனல்சொரிய,
வாழ்வை நாளும் அவர்பணிக்கே,
வழங்கு பவர்யார்? அவர்மகாத்மா! 2

மனமெய் மொழியால், தீமையளவும்
வழுவா துண்மை கடைப்பிடித்துத்
தினமும் உலகிற் குயர்ந்தபணி
செய்வார் எவரோ? அவர்மகாத்மா! 3

கணமும், பிறரைத் துன்புறுத்தும்
காய்தல், இன்றி கனிந்துயர்ந்த
குணமார் குன்றில், நின்றருளைக்
கொட்டு பவர்யார்? அவர்மகாத்மா! 4

அன்பால் அறிவால், அறப்பண்பால்,
அல்லும் பகலும் அலுப்பின்றி,
வன்ப கைக்கும் அருள்சுரக்கும்
வள்ளல் எவரோ? அவர்மகாத்மா! 5

இழித்துப் பழித்து வதைத்திடினும்,
எதற்கும் வெகுளா திப்புவியின்
பிழைக்கு மன்னித் திட, இறைபால்
பிரார்த்திப் பவர்யார்? அவர்மகாத்மா! 6

உலகின் துயரைத் துடைத்திடத்தம்
உள்ளம் உருகி, உற்றபெரு
நலவாழ் வனைத்தும் துறக்குமொரு
நற்றியா கியெவர்? அவர்மகாத்மா! 7

நினைப்போ தளவும் அகலாமல்
செகத்தைத் தாங்கும் நிலையினிலுங்,
கணத்திற் சாவை யணைவதற்கும்
கலங்கா தவர்யார்? அவர்மகாத்மா! 8

ஓடும் புளியம் பழமும்போல்
ஓட்டா துலவி, உலகில்நட
மாடும்உயிர்க்குப் பேரன்பை
அருள்வார் எவரோ? அவர்மகாத்மா! 9

தம்மைப் பிறர்க்குக் காட்டாமல்
தளரா மோனக் குகையமர்ந்து,
புன்மை யுலகிற் கினியதவம்
புரிவார் எவரோ? அவர்மகாத்மா! 10

"பரமஹம்ஸ தாசன்"

## ஒன்று

மனிதன் ஒன்று; தலம் ஒன்று. அவனையும் அவனது சூழ்நிலைகளையும் ஆக்கித்தந்த பரம்பொருள் ஒன்று. நன்றாக ஊன்றி நோக்கினால் ஒன்று ஒன்றேதான்; ஆனால் அதுவும் அது தறிக்கும் பொருளும் பெரிது. ஒன்று இல்லாமல் ஓரிலக்கமும் ஏற்படாது; எண்களுந் தோன்றமாட்டா இந்த உலகமும் நாமும் ஒன்றினால்தான் ஒன்றியவை. ஒன்று நின்றுலகனைத்தையும் ஆட்டுகின்றது. ஊனும், உலகமும் நாமும் நின்று அதனோடு ஒன்றி ஆடுகிறோம். இந்த ஆட்டத்தை நாம் உணர்வதில்லை; பொருளீட்டத்திலும் மண் தேட்டத்திலும், பெண்கூட்டத்திலும் சித்தம் ஒன்றி அலைகிறோம். ஒன்றை, ஒன்றிநின்றும் வழுத்தநாவும், நன்று துதிக்க நலன் பெறும் கரங்களும் அமைத்த அந்த ஒன்று. அது, தெய்வம், கடவுள், இறை என்ற பெயர் இயைந்தது. மனமே! அந்த ஒன்றினை ஒன்றி உயர்வுறுவாய்.

சி. பொன்னம்பலம்

# கேரளத்தில் உதித்த ஜோதி

## சற்குரு வித்தியாதி ராஜபரம பட்டாசாரிய ஸ்ரீ சட்டம்பி சுவாமி திருவடிகள்.

சுவாமி அபேதானந்தா, திருவனந்தபுரம்

சற்குரு ஸ்ரீ சட்டம்பி சுவாமி அடிகளார் கொல்ல
வருடம் 1029-ம் ஆண்டு ஆவணி மாதம் பரணி நட்க்ஷத்திரத்தில்
திரு அவதாரம் செய்தார். கேரள நாட்டில் ஸ்ரீமத் சங்கர பக
வத் பாதருடைய அவதாரத்திற்குப் பிறகு அது போலவே உல
கம் உய்ய அவதரித்த தென் நாட்டு ஜோதியே ஆகும். ஸ்ரீ
சட்டம்பி சுவாமி அடிகளார். திருவனந்தபுரத்தில் கொல்லூர்
என்னும் சிறு கிராமத்தில் விஷ்ணு சர்மன் என்னும் பெரியா
ருக்கும் நங்கேலி அம்மையார் என்ற புனிதவதிக்கும் பிள்ளை
யாகத் தோன்றினார் ஸத்குருநாதர்.

அடிகளாருக்குத் தாய் தந்தையர்கள் செல்லமாக
வைத்த பெயர் குஞ்ஞன் (குஞ்சு) அடிகளாரின் குழந்தைப் பரு
வத்தில் தந்தையார் பரமனடி சேர்ந்தார். உற்றார் உறவினர்
இல்லாத அநதியான தாய்க்குக் குழந்தையை வளர்க்கும் பொ
றுப்பு ஏற்பட்டது. அம்மையார் ஓர் பிராமண இல்லத்தில் வேலை
யாளாக அமர்ந்தார். குழந்தை குஞ்ஞன் அங்குள்ள கோயிலில்
புஷ்பம் கட்டும் திருப்பணியில் ஈடுபட்டான். சர்வ லக்ஷணங்களும்
பொருந்திய குஞ்சன் பார்ப்பவர்கள் உள்ளத்தை எல்லாம் கவர்ந்
தான் இல்லத்திலுள்ள குழந்தைகளுக்கு வாத்தியார் பாடம்
சொல்லிக் கொடுப்பதை குஞ்சன் மறைவாக நின்று சிரத்தை
யுடன் கேட்டு படித்து வந்தார். இதை உணர்ந்த வீட்டு எஜ
மானர் குஞ்சனுக்குப் படிப்பில் இருக்கும் சிரத்தையை மெச்சி மற்
தன் குழந்தைகளைப் போல பாடங்களை கற்பிக்கும்படி உபாத்தியா
யருக்குக் கட்டளையிட்டார். இப்படிச் சிறிது காலம் குஞ்சன் அந்த
இல்லத்தில் தமிழ் சமஸ்கிருதம் கற்றுவந்தார். அங்கு திருமதுரை
பேட்டை என்னும் கிராமத்தில் ராமன்பிள்ளை ஆசான் என்ற
பெரியார் ஓர் குருகுலம் நடாத்திவந்தார். குஞ்சனின் படிப்புத்திற

மையைப்பார்த்து தன் குரு குலத்திலேயே இலவச மாணவனாக ஏற்றுக்கொண்டார். குஞ்சன் ஆசானவர்களிடம் முக்கியமாக கற்றுக்கொண்டது சங்கீத வித்தை. மிகவும் சாமர்த்திய சாலியான குஞ்சனை ஆசானவர்கள் சட்டாம்பிள்ளையாக நியமித்தார். சட்டாம்பிள்ளைக்கு மலையாள பாஷையில் சட்டம்பி என்று பெயர். ஆகவே குஞ்சன் குஞ்சன்பிள்ளை சட்டம்பி என்ற பெயரால் விளங்கப்பெற்றார். அவர் துறவியான பிறகும் சட்டம்பி சுவாமிகள் என்ற பெயர்தான் நிலவி வந்தது.

அடிகளார் குருகுலவாசம் செய்யும் காலத்தில் அங்கு ஒரு மகான் தோன்றி சுப்பிரமணிய உபாசனைக்குரிய மகாமந்திரத்தை அடிகளாருக்கு உபதேசித்து மறைந்தார். அன்று முதல் அடிகளார் தீவிர சாதனையில் ஈடுபட்டார். நடு நிசியில் பாம்பு புற்றுகள் நிறைந்த ஓர் பாழடைந்த கோயிலில் சென்று சாதனை புரிந்தார். ஆசானுக்கும், மற்றும் மாணவர்களுக்கும் அடிகளார் மீது சந்தேகம் ஏற்பட்டது. ஆசானின் கட்டளைப்படி நடு நிசியில் மாணவர்களில் சிலர் மறைவாக அடிகளாரைப் பின்பற்றினார்கள். அடிகளாரின் தீவிர பக்தி சாதனையை உணர்ந்து எல்லோரும் வியப்படைந்தார்கள். ஆசானவர்கள் அடிகளாரை கட்டியணைத்து முத்தமிட்டு "குஞ்சு" நீ இவடத்தில் படிக்க வேண்டிய வேலை முடிந்துவிட்டது உனக்கு உபரி வித்தைகளை கற்றுக்கொடுப்பதற்கு நான் தகுதியற்றவன். நீ பெரிய மகானாக விளங்குவாய் என்று ஆசீர்வதித்தார் அடிகளார் ஆசானைப்பணிந்து விடைபெற்றுக்கொண்டார்.

அடிகளாரின் தமையனார் அயலூரில் பத்திர பதிவு காரியாலயத்தில் குமாஸ்தாவாகப் பணியாற்றி வந்தார். அடிகளார் தன் தமையனாரிடம் சென்று பத்திரம் எழுதும் பணியில் ஈடுபட்டார் அடிகளார் இரண்டு கைகளாலும் சுந்தரமான வடிவில் எழுதுவார் பத்திரம் பதிவு செய்ய வருபவர்களெல்லாம் அடிகளாரையே நாடினார்கள். மற்ற எழுத்தாளர்களுக்கு வருமானம் நின்றுவிட்டது ஆகவே அடிகளார் தனக்குக்கிடைக்கும் வருமானத்தை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்தார். அடிகளாரின் தியாக புத்தியை எல்லோரும் புகழ்ந்து மகிழ்ந்தார்கள். அப்பொழுது திருவாங்கூர் திவானாக இருந்தவர் திருமாதவராயர். அடிகளாரின் எழுத்துத் திறமையைப் பார்த்து அவரை சமஸ்தான காரியாலயத்தில் குமாஸ்தாவாக நியமித்தார். அடிகளாருக்குக் கிடைக்கும் சம்பளத்தைவிட

இனுமாக ராயர் அவர்கள் அன்பின் மிகுதியால் தன் கையிலிருந்து கொடுக்க முன்வந்தார். அடிகளார் அதை ஏற்றுக்கொள்ளாமல் இருந்ததால் தியாகமூர்த்தி எனப் புகழடைந்தார். அடிகளார் இளம் பிராயத்திலிருந்தே தனக்காக வாழாமல் பிறருக்காக வாழ்வதுதான் வாழ்வு அல்லது தாழ்வு என்றும் முதுமொழியைப் பூரணமாகப் பின் பற்றினர். இழிதாகக் கருதப்படும் சமுதாயத்தாரை ஆதரித்து சமயச்சாரமென்று போலிப்பெயரால் வழங்கிவரும் ஆபாசமான ஆச்சாரங்களை ஒழிக்கப் பாடுபட்டு வந்தார்.

ஒரு நாள் ஏழைகளுக்கு அன்னமிடும் பணியில் ஈடுபட்டிருந்த அடிகளாருக்கு நாய்களின் மத்தியிலிருந்து எச்சில் உணவைச் சாப்பிட்டுக்கொண்டு இருந்த ஒரு மகானைத் தரிசிக்கும் பாக்கியம் நேர்ந்தது. பார்த்தபோதே அவர் மகான் என்று உணர்ந்த அடிகளார் அவரை அடைக்கலமடைவதற்கு அதி சீக்கிரமாக ஓடிச் சென்றார். அந்த மகானும் அடிகளாருக்கு அகப்படாமல் வேகமாக ஓட ஆரம்பித்தார். அடிகளாரும் விடாது தொடர்ந்து ஓடினார்கள். திருவனந்தபுரத்துக்கு சுமார் பத்து மைல் தூரத்திலிருக்கும் ஒரு மலைக் குகையில் அந்த மகான் ஓடி மறைந்தார். அடிகளாரும் அந்தக் குகைக்குள் நுழைந்தார். இரண்டுவருடகாலம் அடிகளாரைக்காணவில்லை. அந்தக் குகைக்கு "அஸ்வத்தாமா" குகை எனப்பெயர் வழங்குகிறது. அடிகளாரின் நண்பர்கள் அடிகளாரைப் பல இடங்களிலும் தேடி சலித்துவிட்டார்கள். வெகு நாள் கழித்து அந்தப் பித்தனைப்போலவே அடிகளாரும் தெருவில் திரிவதை காணலுற்றார்கள். பக்தர்கள் அவரை அழைத்துச் சென்று குளிப்பாட்டி உடைகளை அணிவித்தார்கள். அடிகளார் பார்த்து மகான் யார் என்று அவரை வற்புறுத்திக் கேட்கும் போது அவர்தான் "அஸ்வத்தாமர்" என்று திருவாய்மலர்ந்தருளினர். ஆகவே புராணங்களில் காணப்படும் முனிவராகிய அஸ்வத்தாமா தான் அடிகளாரினுடைய ஆத்மீக குரு என்று புலனுகிறது.

அடிகளார் பாரத நாட்டில் கால்நடையாகத்தீர்த்த யாத்திரைசெய்து வந்தார். தமிழகத்தில் கல்லிடைக் குறிச்சியிலுள்ள அக்ராகாரத்தில்மிகப் பெயர்பெற்றஓர் சாஸ்திரிகளிடம் வேத சாஸ்திரங்களை பயின்றார். சமரச சன்மார்க்கத்தில் விருப்பம் உடைய

சாஸ்திரிகள் அக்கிர காரத்தில் மற்றவர்களுக்குத் தெரியாமல் வேத சாஸ்திரங்களை இரவு காலத்தில் அடிகளாருக்கு கற்றுக் கொடுத்தார். திருவனந்தபுரத்தில் பத்மநாபசாமி ஆலயத்திற்கு மேற்புறமுள்ள ஓர் பாழடைந்த கிரந்த நிலயத்தில் புகுந்து மூன்று நாள் அங்கிருந்து இரவும் பகலுமாக சாஸ்திர பரிசோதனை செய்தார். அங்குள்ள பண்டிதர்களும் பெரியோர்களும் அடிகளாருக்கு இருக்கும் அற்புத வித்ய திறமையைப் பார்த்து அவருக்கு வித்தியாதி ராஜன், பரம பட்டாரன் என்ற பட்டப் பெயரை சூட்டி மகிழ்ந்தார்கள். அக்காலத்தில் அடிகளார் தைகாட்டு அய்யாச்சாமிகள் என்ற புகழ் பெற்ற ஒரு மகா யோகியை அனுகிஹடயோக வித்தை பயின்று அரும் பெரும் சித்திகளைப் பெற்றார். அடிகளார் பூமிக்கு 15 அடி உயரத்தின் அந்தரத்தில் இருப்பதைத் தரிசனம் செய்யப் பாக்கியம் பெற்றவர்கள் இன்னும் இருக்கின்றார்கள். அடிகளார் சித்தியால் விருப்பம் இல்லாதவராக இருந்தும் அது மேல் நிலக்கு தடையாக இருப்பது என்று போதிப்பவராக இருந்தும் சில சமயங்களில் வேடிக்கையாகச் சித்துகள் விளையாடியிருக்கின்றார்கள்.

அடிகளார் ஹாஸ்யத்தில் மிகவும் பிரியமுடையவர் பிறரை வயிறு புடைக்கும் படி சிரிக்க வைக்கும் திறமையுடையவர். அடிகளாரை ஒருமுறை பார்த்தவர்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள். அடிகளார் நீளமான தாடியும் கேசமும் உடையவராகவும் சகல லக்ஷணங்களும் பொருந்தின ஆஜானுபாகுவாகவும் விளங்கினார்.

ஓர் சில வேடிக்கைகள்:—

கேரள நாட்டில் பாம்பு மேக்காடு என்று புகழ்பெற்ற இல்லத்தில் அடிகளார் ஓர் முறை விஜயம் செய்தார். அந்த இல்லத்தில் தொன்று தொட்டுப் பரம்பரையாக எல்லோரும் பாம்பு உபாசனை உடையவர்கள். மந்திர சக்தியினால் பெரிய பெரிய நாகங்களை வரவழைக்கும் வல்லமையுடையவர்கள். அடிகளார் அந்த இல்லத்திற்குள் சென்றதும் அங்கு பூஜைக்கென்றே போட்டிருக்கும் ஓர் பீடத்தில் ஏறி அமர்ந்து கொண்டார். இந்தத் தகாத செயலைப் பார்த்து, அங்கிருந்தவர்கள் ஓடோடியும் சென்று பெரிய நம்பூதிரியிடம் இந்தச் செய்தியைத் தெரிவித்து முறையிட்டார்கள். பெரிய நம்பூதிரி

மிகவும் சினம் கொண்டவராக அங்கு வந்தார். "நீ யார்? எங்கு வந்தாய்? மூட்டாள் பீடத்திலா உட்காருவது! சீக்கிரமாக எழுந்து வெளியே போ! உனக்கு இந்த இல்லத்தின் நிலைமை தெரியாது போலும்" என்று அடிகளாரை அதட்டிப் பேசலானர். சிரிப்பே பூஷணமாகக் கொண்ட அடிகளார் உரக்கச் சிரித்தார். "ஓ ஹோ இவ்வளவு திமிரா உனக்கு! இதோ பார் என்று நம்பூதிரி சுற்றிலும் ஓர் பார்வை பார்த்தார்.'

எங்கிருந்தோ ஏராளமாகப் பாம்புகள் வந்து அடிகளாரைச் சூழ்ந்து கொண்டன நம்பூதிரிபார்த்ததைப் போல் அடிகளாரும் பார்த்தார் அவ்வளவுதான்! எத்தனை பாம்புகள் அங்கு இருந்தனவோ அத்தனை கீரிகளும் அங்கு காக்ஷியளித்தன. பாம்புகளைக் காணவில்லை. கீரிகளும் மறைந்தன. நம்பூதிரி அடிகளாரின் திருவடிகளில் விழுந்து சரண் அடைந்தார்.

நாய்களுக்கு அன்னமளித்தல்:—

ஒரு நாள் மாலைப் பொழுதினில் அடிகளார் தெருவில் உலாவும் பொழுது இரண்டு நாய்கள் ஓர் எச்சில் இலைக்காகச் சண்டை போடுவதைப் பார்த்தார். ஏ! சண்டை போடாதீர்கள்! வாங்கடா!" என்று அடிகளார் அழைத்த மாத்திரத்தில் நாய்கள் வால்களை ஆட்டிக் கொண்டு மிக மரியாதையுடன் அடிகளாரை பின் பற்றின. வழியில் பார்த்த நாய்களை எல்லாம் அழைத்து ஓர் பட்டாளமாக அமர்த்திக் கொண்டார். அடிகளாரை எதிர்ப் பார்த்துக் கொண்டிருந்த ஓர் இல்லத்தில் சென்று தன்னுடன் வந்திருக்கும் அதிதிகளுக்கு அன்னமளிக்கும்படி கட்டளையிட்டார். நாய்களெல்லாம் வாயில் புறத்தில் வரிசையாக இருப்பதை உணர்ந்து கொள்ளாத பக்தன் அடிகளாரைத் தரிசிப்பதற்கு வெளியூரிலிருந்து அநேகம் அன்பர்கள் வந்துளார் என்று நினைத்து அதிசீக்கிரமாகச் சமையலாகும்படி ஏற்பாடு செய்தார். சமையலானதும் அதிதிகளை அழைக்க வேண்டும் என்று பக்தன் அடிகளாரிடம் வேண்டிக் கொண்டார். அடிகளாரும் பக்தனை வெளியில் அழைத்துச் சென்று வரிசையாக அமர்ந்திருக்கும் நாய்களைக் காட்டி 'இவைகளுக்கெல்லாம் திருப்தியாக அன்னம் அளிப்பாயாக" என்று மொழிந்தார். நாய்களைப் பார்த்து வியப்புற்ற பக்தன் அடிகளாரின் திருவிளை

யாடல்களை எண்ணி எண்ணி, மிக மகிழ்ச்சியுடன் அடக்க ஒடுக்கமாக. உட்கார்ந்திருக்கும் அவைகளுக்கு இலை போட்டு திருப்தியாக அன்னமளித்தார். சாப்பாடுமுடிந்ததும் இலைகளைத். தூக்கிக் கொண்டு அமைதியுடன் செல்லுங்கள்" என்று அடிகளார் நாய்களிடம் சொல்ல அவைகளெல்லாம் மிக மரியாதையுடன் இலைகளைத் தூக்கிக் கொண்டு தொலையில் போட்டுவிட்டுச் சென்றன.

ஒரு நாள் அடிகளார் ஓர் பக்தனின் இல்லத்தில் விஜயம் செய்தார். அந்தப் பக்தனை எலி கடித்து மிகப் பரிதாபமான நிலையில் இருக்கக் கண்டார். பக்தனுக்கு வேண்டிய மருந்துகளைக் கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டு அடிகளார் ஏ! என்று சத்தமிட பக்தனை கடித்த எலி பொத்தென்று கீழே விழுந்தது. அடிகளார் ஓர் சிறு கம்பால் அந்த எலியைத் தட்டி "நீ இனிமேல் இங்கே இருக்கலாகாது. உன் இனத்தார்களை எல்லாம் அழைத்து வா" என்று சொன்னதும், அந்த எலி மேலே சென்று ஓர் சில நிமிஷத்தில் அநேகம் எலிகளுடன் அடிகளாரின் முன் தோன்றியது. அடிகளார் எழுந்து முன் செல்ல எலிகளும் வரிசையாகப் பின்பற்றின. சூர்ணி நதியின் வாய்க்கால் ஒன்றில் அடிகளார் இறங்கி மறுகரை சென்றார். எலிகளும் நீந்தி மறுகரை சேர்ந்தன. "மற்றைய பேர்களுக்கு அதிகமாகத் தொந்தரவுகள் கொடுக்காமல் வாழுங்கள்" என்று எலிகளை அனுப்பிவிட்டு அடிகளார் திரும்பினார்.

மலையாற்றூர் என்னும் ஊருக்கடுத்த காட்டில் அடிகளார் ஒரு சமயம் உலாவிக் கொண்டு இருந்தார். அங்கு ஓர் பெரிய வேங்கைப்புலி ஓர் பசுவின் மேல் தாவுவதைப் பார்த்து "ஏ! தொடாதே" என்று அடிகளார் சத்தமிட்டார் புலியும் பசுவைத் தொடாமல் அடிகளாரின் முன்வந்து ஓர் நாய்போல் அடிகளாரின் மலரடியில் குந்தி இருந்தது. அடிகளார் அதன் முதுகை வருடிக் கொடுத்து "இனிமேல் இந்த மாதிரி செய்யாதே" என்று புலிக்குக் கட்டளையிட்டுப் போகச் சொல்லிவிட்டு மறுபடியும் உலாவச் சென்றார். அங்கு மரத்தின்மேல் பரண் போட்டு இருந்தவர்களாகிய வேட்டைக்காரர்கள் இந்த அற்புதத்தைப் பார்த்து வியப்படைந்தார்கள். அவர்கள் இந்த நிகழ்ச்சியை ஊருக்கெல்லாம் தெரியும்படி செய்தார்கள். அடிகளார் இந்தமாதிரி வேடிக்கைகள் பல நிகழ்த்தி மக்களை மகிழும்படி செய்திருக்கிறார்கள் வண்டி மாடுகள், நாய்கள், பாம்புகள் முதலிய உயிரினங்களின் முற்பிறப்பைச் சுட்டிககாட்டி அவைகளை அனுக்கிரகித்தும் இருக்கிறார்.

விவேகானந்தரைச் சந்தித்தல்:—

அன்று அடிகளார் எர்ணகுளத்தில் ஓர் அன்பர் வீட்டில் தங்கி இருந்தார். அந்த ஊரில் விஜயம் செய்திருக்கும் விவேகானந்த ஸ்வாமிகளைப் பற்றி சில அன்பர்கள் வந்து அடிகளாரிடம் தெரிவித்தார்கள்:— அடிகளார் விவேகானந்தரைச் சிவபெருமானுடைய அவதாரமென்றும், அவரைத்தான் தெரிசிக்க வேண்டுமென்றும் மொழிந்தார். அன்பர்கள் அடிகளாரை விவேகானந்தரிடம் அழைத்துச் சென்றார்கள். யாரையும் மதிக்காதவராகிய விவேகானந்தர், அடிகளாரைப் பார்த்ததும் அதி சீக்கிரமாக எழுந்து ஓடோடியும் சென்று அவரை வணங்கினர். இரண்டு பேர்களும் பரஸ்பரம் கட்டியணைத்துக் கொண்டார்கள். விவேகானந்தருக்கு சின்முத்திரை, கேசரீ முத்திரை முதலியவைகளில் இருந்த சந்தேகத்தை அடிகளாரிடம் கேட்டு நிவர்த்தி செய்து கொண்டார். வட மொழியில் அவர்கள் செய்த சம்பாஷணையினல் பார மார்த்திகத் துறையில் ஈடு பட்ட அன்பர்கள் மிகவும் பயன் அடைந்தார்கள். விவேகானந்த ஸ்வாமிகள் தன் சகோதர சன்னியாசிகள் பலருக்கும் அடிகளாரைப் பற்றிச் சொல்லி அவரை தெரிசித்து வரும்படியாகவும் சொன்னார்கள்.

அடிகளார் கேரள நாட்டில் மிகப் பிரசித்திப் பெற்ற ஸ்ரீ நாராயண குரு ஸ்வாமிகள், ஸ்ரீ நீலகண்ட தீர்த்த பாதர், ஸ்ரீ வாழூர் தீர்த்த பாதர் முதலிய சந்நியாச சீடர்களை ஈன்றெடுத்து உலகிற்களித்து அனுக்கிரகித்துள்ளார்கள். ஸ்ரீ நாராயண குரு ஸ்வாமிகளுக்கு தாழ்த்தப் பட்ட சீர்திருத்த வேலைகளுக்கு ஊக்கமளித்தார். அடிகளார் சங்கீதம் சாஹித்யம், சித்திரக் கலை, நாட்டியக் கலை ஆகிய முக்கிய கலைகளல்லாமல் 64 கலைகளிலும் மிக தேர்ச்சி பெற்றவர் சர்வ கலாவல்லபர் என்று மக்கள் அவரைப் புகழ்ந்தார்கள். வீணை, பிடில், மிருதங்கம், கஞ்சிரா முதலிய வாத்தியங்களை பிரயோகிப்பதில் அடிகளாரின் திறமையைப்பார்த்து அந்தத் தொழில்காரர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டு அடிகளாரை சரண் அடைந்து ஆசி பெற்றுச் சென்றார்கள். அடிகளார் வட மொழியிலும் தென் மொழியிலும் அநேகம் நூல்கள் இயற்றியுள்ளார். ப்ராசீன மலையாளம் என்ற

நூலில் ஜாதி குல ஆசாரங்களின் தத்துவத்தை விளக்கி, இப்பொழுது நடக்கும் ஜாதி ஆசாரமென்று வைத்துக்கொண்டிருக்கும் ஆபாசங்களை கண்டனம் செய்துள்ளார். "சமுதாய வேற்றுமை கொண்ட கேரள நாடு ஓர் பைத்தியக்கார ஆஸ்பத்திரியேயாகும்." என்று விவேகானந்தர் சொன்னதை அடிகளார் கூடுமானவரையிலும் ஒழித்துக்கட்டினார்.

அடிகளாருடைய எண்ணிறந்த கிருஹஸ்த சீடர்களில் கும்பளம் சங்குப்பிள்ளை என்பவர் ஒருவர். அடிகளார் மகா சமாதியடைந்த தருணத்தில் இறுதிக் கடன் முதலிய மேலான கைங்கரியங்களை செய்யும்படியான பாக்கியத்தைப் பெற்றவர் சங்குப்பிள்ளையே ஆவர். இப்படி உலக மக்கள் உய்யும்படியான சுலபமான வழிகளைக் காட்டி தான் பெற்ற இன்பம் பெறுக வையகம்" என்ற பேருரைக்கிணங்க உலகத்தையனுக்கிரகித்து மகா புருடராகிய அடிகளார் பரமனடி சேர்ந்தார். கொல்ல வருடம் 1099ம் ஆண்டு சித்திரை மாதம் கார்த்திகை நக்ஷத்திரத்தில், பன்மனை என்னும் சிறு கிராமத்தில் தான் ஸத்குரு நாதர் மஹா சமாதியடைந்தார். இப் பெரும் வள்ளல் மறைந்து இப்பொழுது 35 வருடங்கள் ஆகிவிட்டன. மஹா சமாதியில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து ஓர் அழகான ஆலயமும் பக்தர்கள் அமைத்துள்ளார்கள். நாட்கள் செல்லச் செல்ல அன்பர்கள் திரள் திரளாகச் சென்று தெரிசனம் செய்து கோரிக்கைகளும் பூர்த்தி செய்து கொள்ளுகிறார்கள். இப்படி ஸத்குரு நாதர் சூட்ம சரீரியாக அன்பு வடிவமாக எல்லோருள்ளத்திலும் விளங்கி ஆட்சி செலுத்துகிறார். வாழ்க அவன் அடியார்கள். அன்பு! இன்பம்! அமைதி!



## கடவுள்

கடவுள் எத்தனைபேர்? ஒருவரே. அவரை அறிவேன். அவரே ஆன்மாவின் மூலமாவர். (உபநிடதம்)

என்னைவிட உயர்ந்த தொன்றுமில்லை. முத்துக்கள் நூலில் கோத்துள்ளது போல் பிரபஞ்சம் முழுவதும் என்னிடமேயுள்ளது. (பகவத் கீதை.)

னந்தராது நாத வாடை இவர் மேல் வீசியதன் பலனுய் புண்ணிய பூமியாகிய இந்தியாவிற்கும் இலங்கைக்கும் யாத்திரை புரிந்தவர். இந்த யாத்திரையின் சரித்திரமே "கிருஷ்ணசப்பெல்" என்ற யோகாஸ்சிரமம். இந்த ஆஸ்ரமத்திலே, ஆத்ம விசாரணையிலே ஈடுபாடுள்ள பல அமெரிக்கப்பெரியார்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆஸ்ரமத்தின் பணிகளுள் பெரும்பணியாக அமைந்து, உலக அங்கத்தவர்களுக்கு கடிதமூலம் யோகஞானத்தையும் இறை வழிபாட்டையும் பரப்புதலே The New Age Applied Yogae Corresponde-nce Course.

இலங்கையிலே கொழும்பில் தங்கியிருந்த காலத்தில் அளவட்டி பெரியார் ஒருவரது தொடர்பு ஏற்பட்டது. அதன் பலனுய் யாழ்ப்பாணத்து தவமுனிவரது நல்லாசியும் கிடைத்தது. அளவட்டி கும்பளாவளை விநாயகப் பெருமானை அர்ச்சிக்கும் பொழுது, தனது "ஹான்ஸன்" என்ற பெயரை சுப்பிரமணியம் என்று மாற்றி, (I am a Suppar Man என்று காஸ்யமாகவும் தத்துவம் ஆகவும் கூறினர்) இதே பெயரோடு (Sri Subramaniya) வாழ்கிறார். சிவன், உமை திருமால் முருகன் ஆதிய தெய்வத் தன்மைகளை உணர்ந்து, அவ்வடிவங்களை ஒன்றித்து தமக்கென ஒரு தனித்துவ நிலையில் இந்து மதப் போதனை புரிந்து வருகிறார். திரு அண்ணுமலை, பழனிமலை, கதிரமலை, போன்ற புனிதமலை, வழிபாடும் ஆங்கு நிகழ்ந்து வருகிறது. உலகத்துப்புண்ணிய க்ஷேத்திர தானங்களிலிருந்து விதிமுறையாகக் கற்களை வரவழைத்து, அந்தப் பரிசுத்த கற்களால் தேவப்பிரதிட்டை பண்ணி வழிபாடு இயற்றி வருகிறார்.

"யான் பெற்ற இன்பம் இவ்வையகமெல்லாம் பெறுக' என்று பரந்த தொருபணியாற்றி வரும் இத்தவயோகியின் பிரசாதமான கடிதங்களைப் பெற விரும்புவோர் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்குக.

The World Fellowship, Of Yoga
**3575**, Sacramento Street,
Sanfrancisco 18,
Calif, U. S. A.

உலகம் பரவி வரும் இந்து மதமும் இப்பெரியாரின் சேவையும் வாழ்க.

சி. பொன்னம்பலம்.

# அடிமைதனை ஏற்றுக்கொள் அம்மா!

[சோமலிங்கம்]

நல்லவை எண்ணிடும் உள்ளமும் ஈந்து
நாள்தோறும் உன்பாதம் மறக்காமல் வந்து
பொல்லாத செய்கையெலாம் நீக்கி எனை ஆண்டு
பொறுமைக்குப் பேர்பெற்ற வடிவமும் தந்து
வல்லமைகள் பலகொண்ட மஹாசக்தி உந்தன்
மலர்ப்பாதம் மறக்காத வாழ்வு எனக்கீந்து
நல்லவனாய் வாழ்ந்திடச் செய்துவாய் காளி
நான் எண்ணும் உயர்இன்பம் ஈதுவாய் காளி!

இல்லாத துன்பங்கள் நீக்கிடும் காளி!
என்றைக்கும் என்னுடன் வாழ்ந்திடும் சக்தி
பொல்லாத பேர்க்கும் இன்பங்கள் ஈந்து
புன்மை தனை நீக்குகின்ற சங்காரி! வீரி!
வல்லமை பல கொண்ட மஹாசக்தி உந்தன்
வண்ணமுகம் தனைக்காட்டிக் கருணைதனை ஊட்டி
எல்லோரும் நல்லவர்கள் எனஎண்ணும் உள்ளமும்
எனக்கீய வேண்டும் என் சுந்தரி! காளி!

நில்லாத செல்வத்தை நிலையென்று எண்ணி
நித்தமும் அதுதரும் போதையில் மயங்கி
பொல்லாத செய்கையுடன் உறவு நான் பூண்டு
பொழுதெல்லாம் போக்கியது போதும் என் அம்மா!
கொல்லாமை தனை வையம் தன்னில் பரப்பும்
கொள்கை துலையாமல் எனை ஆண்டுகொள் அம்மா
சொல்லொணாத் துன்ப இருள் போக்கிடும் எந்தன்
சுந்தரி! நிரந்தரி! சுத்த ஓங்காரி!

உன்னைவிட வையத்தில் எனக்கு உதவியில்லை
ஓங்காரி! சர்வபரிபூரணி! காளி!
என்னை நீ ஈன்ற தோ(டு)டிற்றை வரை காத்து
என்றைக்கும் குறையாத கல்விநலம் ஈந்து
முன்னம் நான் செய்வினைகள் அத்தனையும் நீக்கி
முக்திநெறி தான் காட்டி முன்னேற்றம் தந்த
அன்னையே அடிமைதனை ஏற்றுக் கொள் அம்மா!
அம்பிகை! நிரந்தரி! சுந்தரி! காளி!

# நம் பார்வை கீழே திரும்ப வேண்டும்

(விநோபாஜி)

பூதான இயக்கம் பொருளாதார சமத்துவத்தை உண்டாக்குவதற்காக மட்டும் நடப்பதல்ல. இதற்குக் காரணமாயுள்ள நோக்கங்கள் இரண்டு; அவையின்றி சமத்துவம் ஏற்படுவது சாத்தியமல்ல. யந்திர ரீதியில் அச்சில் வார்த்து எடுத்தது போல் நிறுவப்படும் சமத்துவம் திருப்தி தருவதாகவும் இராது. அதை நிறைவேற்றுவதும் சுலபமல்ல. நாம் ஏற்றுள்ள இந்த மலையேற்றப் பணியின் சமத்துவத்தை விட ஈகைக்கும் உடலுழைப்புக்கும் முக்கியத்துவம் அதிகம். ஆகையால் நான் இந்த இரண்டையுமே எங்கும் பரப்ப விரும்புகிறேன்.

உலகத்தில் இன்று எங்குமே ஈகை அற்றுப்போய் விட்டது: ஈரமே இல்லை. வாழ்க்கை முறையே ஈகை பிறப்பதற்கு இடமில்லாததாய் பொறாமையை வளர்க்க உதவுவதாய் உள்ளது. வாழ்க்கையின் முக்கிய பகுதியே பொறாமையும் துவேஷமுமாக ஆகிவிட்டது. இந்தப் பொறாமை ஒரு சமயம் பொருளாதார உருவில் தோன்ற, மற்றொரு சமயம் போட்டியாகக் காட்சியளிக்கிறது. எந்த உருவில் எந்த உடுப்பில் இது இருந்தபோதிலும் இதன் உண்மைத் தன்மை பொறாமையே. நாம் எப்பொழுதும் நமக்கு மேலே பார்க்கிறோமேயன்றி, கீழே பார்ப்பதே இல்லை. பத்தாயிரம் ரூபாயுள்ளவன் ஒரு லட்சம் உள்ளவனையும், ஒரு லட்சமுள்ளவன் பத்து லட்சமுள்ளவனையும் அண்ணாந்து பார்ப்பதால் இவர்களுக்குப் பொறாமையே உண்டாகிறது. சிறிய மனிதர்கள் முதல் பெரிய மனிதர்கள் வரை எல்லோரையும் இந்தப் பொறாமைப் பேய் பிடித்து உலுக்குகிறது. மிகவும் உயர்ந்த அதிகாரங்களும் ஏராளமான செல்வமும் மதிப்பும் பெற்றுள்ளவர்களுக்குக்கூட மனநிறைவு இல்லை. யோகி ஒருவர் எல்லாவற்றையும் துறந்தவரென்றால் அவருக்கும் இன்னொரு யோகியைக் கண்டால் பிடிக்கவில்லை, பொறாமைப் படுகிறார்!

துளசிதாசர் மிகவும் பெரிய வைணவ பக்தர். அவர் காசியில் வாசம் செய்துகொண்டு எல்லோருக்கும் பக்தியூட்டி வந்தார். தருமத்தின் உட்கருத்தை விளக்கிச் சொல்லி ராமாய

ணம் பாடி வந்தார்; ஆனால் அங்கிருந்தவர்கள் அவரையும் ஓரிடத்தில் தங்கவிடாமல், ஒரு மடத்திலிருந்து இன்னொன்றுக்குப் போகுமாறு செய்து வந்தார்கள். பிற வைஷ்ணவர்களுக்கும் பிற சமயத்தார்களுக்கும் அவரது பெயரையும் புகழையும் காணச் சகிக்கவில்லை. "நம் கதைகளுக்கு ஒருவரும் வருவதில்லை இந்தத் துளசிதாசர் கதை சொல்லுகிறாரென்றால் இவ்வளவு கூட்டம் கூடுகிறதே" என்று அவர்களுககெல்லாம் பொறாமை. ஆனால் அவருக்கு எவரிடமும் சிறிதும் பொறாமையோ துவேஷமோ இல்லாததால், அவர் எவரையும் விரோதித்துக்கொள்ள விரும்பாமல் இங்கிருந்து அங்கும் அங்கிருந்து இன்னோரிடத்திற்கும் போய்க்கொண்டிருந்தார். இவ்வாறு, வேறு எவருமே தங்க விரும்பாத 'அசிகாட்' என்ற ஒதுக்குப்புறமான கங்கைத் துறையில் போயிருக்கலானார். பொறாமை இவ்வாறெல்லாம் நம்மைப்பாடுபடுத்துகிறது.

யோகிகளையும் பக்தர்களையுமே இது விடவில்லையென்றால் சாதாரண மனிதர்களைப் பற்றிக் கேட்கவாவேண்டும்? ஒரு அரசாங்க அதிகாரிக்கு இன்னொருவரைக் கண்டால் ஆவதில்லை. ஒரு கவிஞருக்கு இன்னொரு கவிஞரைக் கண்டால் பிடிப்பதில்லை. இந்தப் பொறாமை நோய் இன்று சமூகம் முழுவதையுமே கவ்விக்கொண்டிருக்கிறது. இதிலிருந்து தப்புவதற்கு மனிதன் மேலே பார்ப்பதை நிறுத்தி தனக்குக் கீழேயுள்ளவர்களைப்பார்க்கப் பழக வேண்டும். அப்பொழுதுதான் பொறாமை நீங்கி ஈகை பிறக்கும். "ஐயோ, இவர்கள் என்னை விடத் தாழ்ந்த நிலையில் இருக்கிறார்களே! இவர்களுக்கு நான் உதவவேண்டாமா?" என்ற எண்ணம் உண்டாகும். அப்பொழுது பொறாமைக்கு இடமே இராது. தன்னிடம் இருப்பது குறைவாயினும் அதில் ஒரு பகுதியைத் தேவையானவர்களுக்குக் கொடுக்கத் தோன்றும். "நான் தினமும் எட்டணாவாவது சம்பாதிக்கிறேன். இவர்களிடம் நிலமோ பணமோ, செய்ய வேலையோ ஒன்றுமில்லையே. எனக்குக்கிடைப்பதில் சிறிது இவர்களுக்குக் கொடுப்போம்" என்று எண்ணுவோம். இவ்வாறு சமூகத்திலுள்ள எல்லோரும் தம் பார்வையைக் கீழே திருப்பினால் ஈகை காட்டத் தொடங்குவார்கள். கையுள்ளவர்கள் கைகாலில்லாத நொண்டி முடங்களின் நிலைமை எப்படியிருக்கும் என்பதை எண்ணிப் பார்ப்பார்கள். இதற்கான முயற்சியே பூதான இயக்கத்தினால் நடைபெறுகிறது.

# பிறவிக் கடலைத் தாண்ட கோவிந்தனை நினை.

(காமக் கோடி)

மனிதன் பற்பல எண்ணங்களைச் செயலில் உருவாக்க முயலுகிறான். அதற்காக அவன் படும் அல்லல்கள் எண்ணற்றவை. ஏனெனில் அவனது எண்ணங்கள் ஈடேறுவதில்லை ஆனாலும் மீண்டும் செயலைத் தவிர்ப்பதில்லை உண்மையான நன்மையை அறியாது, பொய் நலம் தேடி தன்னையும், பிறரையும் இன்னல்களுக்கு ஆளாக்குகிறான் பணத்தாலும், பதவியாலும் எதையும் சாதிக்கலாமென கர்வம் கொண்டு, மனிதன் செயலில் இறங்குகிறான்; ஆனால் முடிவோ பரிதாபமான தோல்வி— படு தோல்வி. ஆயினும் தன்னாலாவது ஒன்றுமில்லை என்ற நற்படிப்பினை அவன் அறிவதுமில்லை; அறிந்தால் அது மறுகணமே மனத்தினின்றும் அகன்று விடுகிறது.

வாழ்க்கை ஒரு கனவு. கனவில் மனிதன் பல இன்பங்களை அனுபவித்துக் களிப்பது போல் காண்கிறான்; விழித்த பிறகு கனவில் களித்த இன்பங்கள் பொய்யென அறிகிறான். அவ்விதமே, அறியாமையில் ஆழ்ந்த மனிதன் வாழ்க்கையில் காணும் இன்பங்களும், அவைகளை அடைய ஈடுபடும் செயல்களும், அறியாமை நீங்கிய நிலையில், பொய்யென அறிகிறான். அறிவு நிலையில் காணும் போது உலகனைத்தும் மாயை என விளங்குகிறது. இவ்வாழ்க்கையில் இன்பங்களை மனிதன் எவ்வாறு பொய்யென அறிவது? உலகில் மனிதன் இன்ப சாதனங்களாக நினைப்பது மனைவி, மக்கள், செல்வம் புகழ் முதலியன. இவைகளே அவன் வாழ்க்கையிலே ஒரு சமயம் இன்பங்களாகவும், பிறகு துன்பங்களாகவும் மாறுபடுகின்றன; நிலைத்த இன்பங்களாகவே இருப்பதில்லை. ஆகையால் இவைகளாக இன்பம் பெறுவதென்பது மனிதன் தன்னையே மயக்கிக்கொள்வதன்றி வேறில்லை

கணவனுக்கு மனைவி மணமான தொடக்கத்தில் தன் அழகாலும், இன்மொழிகளாலும் இன்பமாகத் தோன்றுகிறாள்; இவ்விதமே தோன்றுகிறான் கணவனும் மனைவிக்கு. காலம் செல்லச் செல்ல, அழகு தேய்கிறது.

பற்பல ஏமாற்றங்களால் ஒருவர்பால்மற்றவர் கொண்ட அன்பும் அதன் விளைவாக இன்மொழியும் குன்றுகின்றன. இளமையும். அழகும் குறையக் குறைய, மயக்கமும் குறைகிறது; மற்றும் பற்பல இன்னல்கள் குறுக்கிட்டு, வாழ்க்கையில் வெறுப்பைத் தலை தூக்கச் செய்கின்றன. கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் சிறிது சிறிதாக வேற்றுமையும் வெறுப்பும் எழுகின்றன. குலம் விளங்கும் என மக்களைப் பெறுகிறான் மனிதன். கல்வி, கேள்விகளில் சிறந்து, நடத்தையால் உயர்ந்து. பெரும் புகழும், பொருளும், ஈட்டி, பெற்றோரின் மனம் களிக்கச செய்வார் மக்கள் என்பது பெற்றோரின் கனவு. ஆனால் செயலில் உறுவாவது எது? இதற்கு நேர் மாறானது நடைபெறுவதை மனிதன் காண்கிறான். மகன் நற்செய்கை தவிர்த்து, தீச்செயலிலேயே முற்படுவான்; உலகத்தவர்களின் பழிச்சொல்லுக்கு ஆளாவான். மனிதன் மக்களால் பெற்ற நன்மை இது தானோ? செல்வத்தை உழைத்தும், பிறரை வஞ்சித்தும், சிறிதும் பிறருக்கு உதவாமல் சேர்க்கிறான் மனிதன். பணமாகவும் நிலமாகவும் சேர்த்து, கண்ணும் கருத்துமாகக் காக்கிறான். ஆனால் அவைகளை அழிக்கப் பலர் தோன்றுகின்றனர். பணத்தையும் நிலத்தையும் மனைவி மக்களே தகாத வழிகளிலும், ஆடம்பரத்திலும் அழிக்கின்றனர்; திருடர்கள் பணத்தை கொள்ளையடிப்பர்; மாரிபெய்யாது நிலத்திலும் விளைவு குன்றி நஷ்டமேற்படுகிறது. இவ்விதம செல்வம் நிலையற்றது. உலகத்தோர் கொடுக்கும் புகழும், செல்வமும், பதவியும், உள்ள வரையில் தான் நிற்கின்றன; பிறகோ அகன்று விடுகின்றன. ஆகையால், உலக வாழ்வில் மனைவி, மக்கள், செல்வம், புகழ் முதலியன எல்லாம் இன்பம் என நினைப்பது மயக்கம். உண்மை இன்பம் என்றும் நிலைபெற்றது; வெளிப்பொருள்களால் வருவதன்று; ஒவ்வொருவனின் உள்நிற்கும் இறைவனுடன் ஒன்றினல் என்றும் நிலைபெற்ற பேரானந்தம் கிட்டுகிறது.

இதற்கான வழி யாது?

இளமை, சுற்றம் செல்வம் முதலியவை யாவும் நிலையற்றவை; அவைகளால் கர்வம் ஒரு போதும் அடையக்கூடாது. மனைவியும், மக்களும். இப்பிறப்பின் இடையில் வந்தவர். இப்பிறப்பிற்கு முன்பும் பின்பும் நாம் யாரோ, அவர்கள் யாரோ என்பதை அறியோம். இறைவனடியை மனத்திலிருத்தி, இக்கணம் முதலே சிந்தித்தல் வேண்டும். காலம் தாழ்த்தலாகாது; ஏனெனில் நாளை என்பது நம்மதோ, நமனதோ யார் அறிவார்?

ஆகையால், பலவித மயக்கம் உண்டாக்கும் பிறவிக்கடலைத்தாண்ட, கோவிந்தனையே இடைவிடாது நினை, நினை, நினை.

# அடியவர் மகிமையும் நம் கடமையும்.

(தடாதகைப்பிராட்டியார். சோமசுந்தரம்)

சர்வ வல்லமையுள்ள சிவபெருமான் அடியார் வடிவாயிருக்கிறார். அவர் கோவில்களில் மட்டும், தான் இருந்து அருள் புரிவதில்லை. வேறு எங்கு இருக்கிறார்? அடியார் உள்ளங்களில் கோவில் கொண்டுள்ளார். கற்றிடும் அடியவர் புத்தியில் உறைகிறார். இதனை உணர்ந்த ஔவைப்பிராட்டி, கீழ்வரும் பாவினால் மிக விரிவாக அடியார் பெருமையை உணர்த்துகிறார்:

"பெரிது பெரிது, புவனம் பெரிது நான்முகன் படைப்பு
நான்முகன் கரிய மாலுந்தியில் வந்தோன் கரிய மாலோ
அலைகடற் றுயின்றோன், அலைகடலோ குறுமுனி கையிலடக்கம்
குருமுனியோ கலசத்தில் பிறந்தோன், கலசமோ புவியிற்
சிறுமண், புவியோ அரவினுக் கொருதலைப் பாரம்,
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம், உமையோ
இறைவர் பாகத்தொடுக்கம், இறைவரோ தொண்டர்
உள்ளத்தொடுக்கம், தொண்டர் தம் பெருமை
சொல்ல வும் பெரிதே."

இவ்வொரு பாடலே போதும், அடியார் பெருமையை தற்கால நவ நாகரீக மக்களுக்கு உணர்த்துவதற்கு. ஆகவே சிவனடியார்களை வணங்கி, அவர்களுக்குத் தொண்டு செய்வதே பெரும் தொண்டு. இதனை உணர்ந்தன்றே, தாயுமான சுவாமிகள் "அன்பர் தம் பொற்பணி வாய்க்குமேல் ஈண்டு ஜன்மம் எடுப்பன் அனந்தமே" என்றார். ஆனால் நாமோ இறைவனுக்கும், அவனது அன்பர்களுக்கும் தொண்டு செய்ய வெட்கப்படுகிறோம். என்னே உலகின் போக்கு!

கற்றறிந்த ஞானிகளை போற்ற வேண்டும். அவர்களது அன்பைப் பெறவேண்டும். அவர்களுடன் சற்று நேரம் இருந்தாலும், அவர்களது அருள் ஒளி நம்முன் பரவும். ஆகையினால் தான் "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்" என்று இறைவனை நம் ஆன்றோர்கள். வேண்டினார்கள் ஆனால் சில நாஸ்திகக்கும்பல், இறைவன் எங்கே இருக்கிறார்? அடியார்கள் யார்? பிராமணர்கள் ஏன்? இவை எல்லாம் வீண்

சில பிராமணர் தீய நெறியில் செல்வதற்கும் நாமே காரணம். நாம் தானம் கொடாது, வேள்விகள் செய்யாது விட்டபடியால், அவர்கள் வறுமையின் நிமித்தம் தம் ஒழுக்கங்களைக் கைவிடவேண்டி நேரிட்டது. "அறியானை அந்தணர் தம் சிந்தையானை" என்கிறார் அப்பர். ஆகவே அந்தணரின் சிந்தையில் சிவன் இருப்பானாகில், அவர்கள் பெருமை சொல்லில் அடங்காது. அவர்களைக் குருவாகப் பேண வேண்டும்.

"வான்முறையான் வந்த நான் மறையாளரை
மேன்முறைப் பாற்றம் குரவரைப் போலொழுகல்
நான்முறையாளர் துணிபு."

அவர்களை எப்படி உபசரிக்க வேண்டும் என அடுத்த பாடல் கூறுகிறது.

" கால்வாய் தொழுவு சமயம் எழுந்திருப்
பாசாரம் என்ப குரவர்க்கிவை இவை சாரத்தால்
சொல்லிய மூன்று."

அவர்களின் காலில் வீழ்ந்து வணங்கி, எழுந்திரு! என்ற போது எழுதலும், ஆகிய இவை குரவர்க்குச் செய்யும் ஆசாரம்.

இப்படியாகச் சிவனடியார்களையும், நம் சமய குருமார்களையும், பேணி உபசரிப்போமேயானல், நிச்சயமாக எம்பெருமானது அருளைப் பெறலாம்.

பத்தராய்ப் பணிவார்களெல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவாரடியார்க்குமடியேன்
சித்தத்தைச் சிவன் பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்களெல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்குமடியேன்
னப்பாலு மடிச்சார்ந்த ரடியார்க்குமடியேன்
னாரூர னாரூரி லம்மானுக்காளே "

இப்படியாக, சுந்தரமூர்த்தி சுவாமிகள், தம்மை அடியானகப் பாடும் பொழுது நாம் எல்லாம் எம்மாத்திரம்.

புத்தலாட்டம், என்று வீண் விதண்டா வாதம் செய்கிறார்கள். இவர்களுக்கு எல்லாம் எந்த நரகத்தில் இடம் கிடைக்குமோ அறியோம். "ஆண்டான் அடியாரை வேண்டாது பேசினர், தாந்தாம் விழுவது தாழ் நரகாமே"

அருட் பெரியாருடைய உறவே நம்முன் இருக்கும் இருளைப் போக்கும். அவர்களுடன் கூடி இருந்தால் பேரின்ப மாகும். "நெறிதான் மிக மிக நின்றருள் செய்யும், பெரியாருடன் கூடல் பேரின்பமாமே" என்கிறது திருமந்திரம். சிவனருள் பெற்றவர்கள் குருமார்களாவர். அவர்களுடைய திருநாமத்தை உச்சரித்தாலும், அவர்களைக் கண்டாலும் நன்மையுண்டாம்.

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே"
(திருமந்திரம்)

முன்னேற்றமடைந்திருக்கும் நாம் (உண்மையில் பின்னேறிய நாம்) நமது சைவப் பண்பாடுகளை கைவிட்டுவிட்டோம். நமது சமயக்குருமார்கள், பெருமை மிக்க அந்தணராவர். இவர்கள் நம் சமூகத்திற்கு மிகவும் வேண்டியவர்கள். இவர்கள் தம் தவத்தின் பயனல் பிராமண குலத்தில் தோன்றி யுள்ளார்கள். பிற சமயக் குருமார்களுக்கு அச்சமயத்தவர் செய்யும் பணிவிடைகளைப் பார்த்தாவது நாம் திருந்தவேண்டும். புத்த குருமார்களின் பாதத்தில் வீழ்ந்து வணங்கி, நீரினல் கால் அலம்பி, பாதத்தை துடைக்கிறார்கள். இவைகள் எல்லாம் நம் குருமார்களாகிய அந்தணர்களுக்கு செய்ய வேண்டிய உபசாரம். ஆனல் நாம் கை கூப்பிக்கூட அவர்களை வணங்குகிறோமில்லை. சிலர், பிராமணரைப்பார்த்து, கள்ளப் பூசாரி, இவர்களுக்கு மட்டும் தான் ஆண்டவனிடம் திருவுருவை தீண்ட உரிமையுண்டோ? என்று கேட்கிறார்கள், அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய தானம், முதலியவற்றை கொடுக்கிறோமில்லை. இப்பேர்ப்பட்ட மூடர் தான் சைவ சமயத்தின் சீர்திருத்தவாதிகள். சைவ சமயத்திற்கு ஒருவிதமான சீர்திருத்தமும் வேண்டியதில்லை. அது ஆண்டவன் வகுத்த சமயம். இவர்கள் சீர்திருத்துவதற்குப் பதில் சீர் கெடுக்கிறார்கள்.

ஆத்ம

# விஷ்ணு தீபம்.



ஆசிரியர்:- கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்.
விலை:- 25 நயாபைசா.
கிடைக்குமிடம்:-யோக சமாஜம், ஸ்ரீராம் நகர்.
அடையாறு, சென்னை-20 S. I.

எல்லார் உள்ளத்திலும் நிறைந்துள்ள ஹிருதயநாராயணனை, மகரிஷி சுத்தானந்தர் அவர்கள் உபாசித்துக் கண்டவர்கள். இதற்கு முன்பு எல்லாமூர்த்தங்களுக்கும் அர்ச்சனைமாலை எழுதியுள்ளார்கள். அதனுல் பல மக்கள் பயனடைந்துள்ளார்கள். இந்நூல் பெருமான் திருவாராதனத்திற்கு அரிய சாதனமாகும். இந்த மந்திரநூலை முறைப்படி கற்று நிற்கும் அன்பர், விஷ்ணுபக்தியால் இகபரசுகமும் எடுத்தகாரியத்தில் வெற்றியும் பெறுவார். விஷ்ணுதீபத்தை உபாசித்தவர், பிறவிப்பயனைப் பெறுவார்.

விஷ்ணுதீபத்தின் அகல், உள்ளம், நெய், பக்தி; திரி, தியானம்; சுடர், ஸ்ரீமந்நாராயணன். விஷ்ணுதீபம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் பொலிக

# ஸ்ரீ ராமகிருஷ்ண ஆசிரமம்.

## கஜேந்திர மோட்சம் திருக்கோஷ்டியூர் போஸ்ட்

### ஸ்ரீ ராமகிருஷ்ண ஜெயந்தி

தென் இந்தியாவில் ஆன்மீக வளர்ச்சி கருதி ஸ்ரீ ராமகிருஷ்ண ஆசிரமம் ஒன்று சிவகங்கை திருப்பத்தூர் ரோட்டில் மணிமுத்தா நதியின் வடகரையில் கஜேந்திர மோட்சமண்டபத்தோப்பில் அன்பர் திரு R. M. வள்ளியப்பன் அவர்களுடைய முயற்சியால் அமைக்கப்பெற்றுள்ளது. 28-2-60 ஞாயிற்றுக் கிழமை அங்கு பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் 125 ஆவது ஜெயந்தி ஸ்ரீ சோமநாரயணன் அவர்களுடைய தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. 600 மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பெற்றது. S. R. M. வள்ளியப்பச்செட்டியார், R. ரெங்கராஜன் ஆகியோர் சொற்பொழிவுகள் ஆற்றினர். சேர் கந்தையா வைத்தியநாதன், கொழும்பு. கதிர்காமம் ஸ்ரீ இராமகிருஷ்ண மடங்களின் தலைவர், திருவையாறு அறுபத்துமூவர் மடஅதிபர், ஆகியோரின் ஆசிச் செய்திகள் வாசிக்கப்பெற்றன. பல அன்பர்கள் பங்குபற்றிப் பலன் அடைந்தனர்.

# சுவாமி அபேதானந்தரின் பொன்மொழிகள்.

1. பக்தி மதத்தைப் பிரசாரம் செய்பவன் பக்தன்

2. உலக நன்மைக்காக மக்களின் பாவத்தையெல்லாம் பிச்சையாக ஏற்று உண்பவனே சந்யாசி.

3. பக்தன் தான் பகவானின் அவதாரத்திற்குக் காரணம்.

4. ஸ்ரவணம் செய்வதில் மூன்று வகையுண்டு. முதல் பிரிவினர் ஒரு செவியில் கேட்டு மற்றொரு செவியின் வழியாக விட்டு விடுவர். இரண்டாவது வகுப்பினர் ஒரு செவியால் கேட்டு வாயால் வெளியே அனுப்பிவிடுவர். மூன்றாவது பிரிவினர் ஒரு செவியின் வழியாகக்கேட்டு மனத்தில் பொறித்து விடுவர்.

5. மனத்தை அவனில் ஸ்தாபனம் செய்து புத்தியினால் ஆராதனை செய்ய வேண்டும்.

6. உற்றவர், பெற்றவர் என்ற காரணத்தினால் அல்லாமல் அந்த சரீரங்களில் உயிர் வடிவமாக இறைவனுடைய சாந்நித்தியத்தைக் காண்பதால் தான் அன்பு பிறக்கிறது.

7. அட்சரம், அவ்யக்தம், கூடஸ்தம், அமிர்தேஷ்யம், பிரம்மம் என்பவை பகவானுடைய நாமங்களேயாகும்.

8. பக்தியாகிய அன்பு நீரைக்கொட்டி, கெட்டி மனமாகிய கல்லைக் கரைத்துவிடு.

9. குடத்தை கவிழ்த்து வைத்து அதன்மீது எவ்வளவு நீரைக் கொட்டினாலும் ஒரு துளிககூட உள்ளே செல்லாது. அது போல அகந்தை பொறாமை முதலியன குடிகொண்டிருக்கும் மனதில் எவ்வளவு நூல்கள் படித்தாலும் பகவானிடத்து நம்பிக்கை பிறக்காது.

10. சத்கைங்கர்யம் அனைத்தும் பகவானுக்குச் செய்யப்படும் கர்மங்களாகும்.

11. பரமாத்மாவை முறையாகப் பிரார்த்திக்கக் கூடியவனே பக்தன்.

12. உலகப் பொருள்களிடத்து வைக்கும் இச்சை - காமம்; பகவானிடத்து வைக்கும் இச்சை - பிரேமை.

13. நீயின்றி வேறு கதியில்லை. உன்னையே சரணமடைகின்றேன் என்று அபயம் புகுவதுதான் பிரார்த்தனை.

14. மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்ற மூன்று ஆசைகளையும் ஒழித்து இறைவனை அடையச் செய்யும் முயற்சிதான் பாரத யுத்தம்.

15. தன் உள்ளத்தைப் பகிர்ந்து கொடுப்பதே உபதேசமாகும்

16. பகவானுக்கும், பக்தனுக்கும் இடையே ஏற்படுவதுதான் உண்மையான பிரபஞ்சம்.

17. சும்மா இருப்பதும் கர்மமேதான் வெறும் யந்திரம் என்று உணர்வதுதான் சும்மா இருத்தல் என்பதாகும்.

18. பக்தனுக்கு 'நான்' என்பது இறைவனுடைய நாமமாகிவிடுகிறது.

19. பிரபஞ்ச நாடகத்தில் பகவான் - கதாநாயகன்; பக்தன் - உபநாயகன்

20. உலக விஷயங்களில் போகாமல் புத்தியை தடுப்பவனே தீரன்

21. நமக்கு உண்மையில் சொந்தமானவன் இறைவன் தான் பெற்றோர், மனைவி, மக்கள் மற்றவையெல்லாம் இரவல்

22. அந்த கரண சுத்தியுடையவனே அர்ஜுனன்

23. வாழ்வில் வரும் துக்கம் பகவானின் பரீட்சை.

24. பக்தி வெறியால் அகந்தை வெறி மாயும்

25. பக்தனிடம் ஜாதி விசாரிக்காதே

26. ஆண்டவனின் நாமத்தைச் சொல்வதே தர்மம்

27. உட்கார்ந்து பஜனை செய்யும் போது மனமும் பிரபஞ்ச விஷயத்தில் அழுந்திவிடும் எழுந்து நின்று பஜனை செய்யும் போது மனமும் இறைவனை நோக்கி எழும்

28. வெண்ணையைப்போல் நமது மனம் ஆகும்போது பகவான் பிரியத்துடன் அதை எடுத்து உண்பான்.

29. புல்லாங்குழல் போல் உள்ளத்தில் ஒன்றுமில்லாமல் ஆக வேண்டும்.

30. நரனுடன் உலாவுகிறான் நாராயணன்

31. ஆபத்துக் காலத்தில் பெருவெள்ளத்தையும் எதிர்க்க, பாறை போல் இரு

32. அடித்து அடித்துதான் ஆணவத்தை ஒழிக்கவேண்டும்

33. 'நான் 'எனது' இல்லாத பக்தி ஒன்றுதான் அவனை எழுப்பக் கூடியது

அடுத்த இதழில் தொடரும்

அன்பு செய் — சேவை செய்

தியானம் பயில் — அனுபூதியடை

# திவ்ய ஜீவன சங்க வெள்ளி விழா

## விசேஷ பிரார்த்தனை.

அன்புடையீர்,

இமாசலம், இருஷிகேசம் ஸ்ரீல ஸ்ரீ சுவாமி சிவானந்த மகரிஷி அவர்களால் ஸ்தாபிக்கப் பெற்ற திவ்ய ஜீவன சங்கம் உலகோர்க்குத் தன்பணியை ஆரம்பித்து இருபத்தைந்து வருடங்களாயின. எனவே திவ்ய ஜீவன சங்கத்தின் வெள்ளி விழாவை அகில உலகமும் கொண்டாடத் தீர்மானித்திருக்கின்றது. விழா 1960 ஏப்ரல் 3-ம் கேதியில் ஆரம்பித்து, இருபத்தைந்து மாதங்களுக்குத் தொடர்ந்து கொண்டாடப்படும்.

இவ்விழாவை, இலங்கைத் திவ்ய ஜீவன சங்கங்களும் 25, மாதங்களுக்குக் கொண்டாடத் தீர்மானித்துள்ளன. நிகழ்ச்சிகளில் ஒன்றாக 1960 ஏப்ரல் 3-ம் தேதி ஞாயிற்றுக்கிழமையிலிருந்து ஞாயிறுதோறும், இருபத்தைந்து மாதங்களுக்குத் திவ்ய ஜீவன சங்கத்தின் சேவைக்காக விசேஷ பிரார்த்தனை நடைபெறும்.

காலம்.....................இடம்.....................

**1960 ஏப்ரல் 3 உ முதல் பிரதி ஞாயிறும்**

| | | |
|---|---|---|
| மாலை 6-00 | மணிக்கு | தீபாராதனை காட்டல் |
| -05 | வரை | ஜெய குரு சிவகுரு ஹரி குருராம்<br>ஜெகத் குரு பரங்குரு சத்குருஸ்யாம் |
| 6-10 | ,, | ஜெய கணேச ஜெய கணேச ஜெய கணேச பாஹிமாம்<br>ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச ரக்ஷமாம் |
| 6-15 | ,, | சரவணபவ சரவணபவ சரவணபவ பாஹிமாம்<br>சுப்ரமண்ய சுப்ரமண்ய சுப்ரமண்ய ரக்ஷமாம் |
| 6-20 | ,, | ஓம் நம சிவாய ஓம் நம சிவாய<br>ஓம் நம சிவாய ஓம் நம சிவாய |
| 6-25 | ,, | ஹரே ராம ஹரே ராம ராம ஹரே ஹரே<br>ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே |
| 6-30 | ,, | ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்<br>ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் |

6-35 , ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம்
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம்
6-40 ,, ஓம் த்ரயம் பகம் யஜாமஹே சுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர் வாருக மிவ பந்தனத் மிருத்யோர்த் முக்ஷிய மாமிருதாத்
முடிவு ஜெயகோஷம் ஜே! ஸ்ரீ சத்குரு மகாராஜுக்கு ஜே (எல்லோரும்)
6-40 - 7-00 வரை சத்சம்பாஷணை திவ்ய ஜீவனம் குருமகராஜ சுவாமி
7-00 தீபாராதனை; வாழ்த்து. சிவானந்தா

இவ்விசேஷ பிரார்த்தனை ஆலயம், சங்கம், இல்லம், பாடசாலை ஆகிய இடங்களில் நடைபெற ஆங்காங்குள்ள திவ்ய ஜீவன சங்க அன்பர்கள் ஏற்ற ஒழுங்குகள் செய்வார்களாக!

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

அ. இ. தி. ஜீ.
சங்கங்கள்.

---

# சுன்னுகம் செல்லாச்சி அம்மையார்

## நினைவுமலர்.

டி நினைவுமலர் வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு ச. அம்பிகைபாகன் அவர்களுடைய முயற்சியினல் உருவாகிஉள்ளது. அம்மையார் அவர்களோடு நேரிற் பழகிய திருவாளர்கள் கு. அம்பலவாணபிள்ளை, செ. மயில்வாகனம் த. கணபதிபிள்ளை க. நவரத்தினம் ஆதியோரும் கட்டுரை வழங்கியுள்ளார்கள். ஸ்ரீ காந்தாஅச்சகம் சொந்தக்காரர் மு. கணபதிபிள்ளை அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். ஸ்ரீ காந்தா அச்சகம், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம் ஈழத்தில் வாழ்ந்த ஆத்மீக அம்மையார் ஒருவரைத் தமிழ் உலகத்திற்கு அறிமுகஞ்செய்துவைக்கின்றது இந்நூல்

Registered at the G. P. O. as a News Paper M, L. 59-300


# வாய்வு சூரணம்

உஷ்ணவாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, மலக்கட்டு, மலபந்தம், அஜீர்ணம், கை கால் அசதி பிடிப்பு, பசியின்மை, வயிற்று வலி, பித்தமயக்கம், பித்தசூலை, புளியேப்பம், நெஞ்சுக் கருப்பு, முதலிய வாய்வு ரோகங்களை நீக்கி ஜீரணசக்திக்கும் தேகாரோக்கியத்திற்கும் மிகச்சிறந்த சூரணம்.

உபயோகிக்கும் முறை

இந்தச் சூரணத்தில் அரை தோலா அளவு எடுத்து அத்துடன் அரை தோலா அளவு சீனி அல்லது சர்க்கரை கலந்து ஆகாரத்துக்குமுன் உட்கொண்டு கொஞ்சம் வெந்நீர் அருந்தவும். காலை மாலை தொடர்ந்து உட்கொள்ளவேண்டும். தேகத்தை அனுசரித்து உட்கொண்டு வரும்போது அளவைக்கூட்டியும் குறைத்தும் உட்கொள்ளலாம். நெய், பால், வெண்ணெய், நிறையச்சாப்பிடலாம். வாரம் ஒரு முறை எண்ணெய் ஸ்நானம் செய்யலாம்.

மூலிகையினால் தயாரிக்கப் பெற்றது.

தபால் செலவு உட்பட டின் ஒன்று 4 ரூ 25 ச.

(பத்தியமில்லை)

**சம்பு இன்டஸ்ரீஸ் சேலம் 2. (S. I.)**

இலங்கையில் கிடைக்குமிடம்

**ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி.**

மலாயாவில் கிடைக்குமிடம்;-

**மு. கணபதி அன் கம்பனி,**

66, பெல்பீல்ட் ஸ்ரீட் ஈப்போ.


---

# சந்தா நேயர்களுக்கு

சந்தா நேயர்கள் கடிதம் எழுதும்போதும், சந்தா அனுப்பும் போதும் விலாசமாற்றம் செய்யும்போதும் தங்கள் சந்தா இலக்கங்களைத் தவறாது குறிக்குமாறு வேண்டுகின்றோம். விலாச மாற்றம் செய்வோர் புதிய பழைய விலாசங்கள் இரண்டையும் தெளிவாக அனுப்புக ஒரே பெயரில் பலர் இருக்கிறார்கள். அதனால் பிழைகள் நேரவுங்கூடும். இன்றுவரை சந்தா அனுப்பாதோர் உடன் அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

இந்தியாவில் உள்ள அன்பர்கள் வழக்கம் போல

R. வீரசம்பு, சம்பு இன்டஸ்ரீஸ், சேலம் 2.

என்ற விலாசத்திற்கு அனுப்பிவைப்பதோடு

இவ்விடமும் அறியத்தருக

**ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி** (சிலோன்)

Printed & Published by Mr. N. Muthiah,
"Athmajothi" Nilayam, Nawalapitiya.
at RAJAH PRESS, Theatre Road, Nawalapitiya, (Ceylon.) 13-3-60